# ராஜதீபம்



அமரர் சிவஞானசுந்தரம் ராஜ்குமார் அவர்களின்
நினைவு சுமந்த நினைவு மலர்

31.08.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. சிவஞானசுந்தரம் ராஜ்குமார்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# "ராஜதீபம்"

*31.08.2022*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



செய்தொழிலே தெய்வமாகக்
கொண்டு, அச்சுத்துறையை
வளர்த்தெடுத்து கடும் பணியால்
மிக மிளிர்ந்து கடும் நேர்மை,
பண்பில் உருவாகி கடின உழைப்பால்
உயர் வழிகாட்டியாகி கடவுளாகிவிட்ட
கண்ணியவான் ராஜ்குமார்
அவர்களுக்கு "ராஜதீபம்" எனும்
இம்மலரினைக் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "



தோற்றம்
28.07.1975

மறைவு
02.08.2022

அமரர்

# திரு சிவஞானசுந்தரம் ராஜ்குமார்

அவர்களின்

## திதி வெண்பா

மன்னு சுபகிருது ஆடிநாள் பதினாறில்
மின்று வளர் சதுர்த்திதனில் - பொன்னின்
பொலிவுள்ள ராஜ்குமார் இகம் நீங்கி
பரமன் பதம் சென்றடைந்தநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத் தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம மர்ந்தபெரு மாளே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.
சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே!

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சிவஞானசுந்தரம் ராஜ்குமார் அவர்களின் வாழ்வுச் சுவடுகள்

ஈழவள நாட்டின் சிகரம் போன்று அமைந்தது யாழ் மாவட்டம். அதன் சிறப்புப் பகுதியாக கல்விமான்களும் அறநெறிச் செல்வர்களும் பாரம்பரிய முறைகளை பண்புடன் பேணிவரும் பண்பாளர்களையும் தன்னகத்தே கொண்டு நீர்வளம், நிலவளம் பொழியும் வடபால் அமைந்த திருநெல்வேலி எனும் கிராமத்தில் சிவஞானசுந்தரம் அனுஷியாதேவி அவர்கள் செய்த புண்ணிய பலத்தால் **1975** ஆம் ஆண்டு யூலை மாதம் **28** ஆம் திகதி திரு. ராஜ்குமார் பிறந்தார். இவருக்கு மூத்தவர்களாக திரு. சிவகுமார், யசோதா என்னும் இருவர் உள்ளனர். கடைசி மகனாக ராஜ்குமார் தாய் தந்தையர் சகோதரர்களின் அன்புக்கும் அரவணைப்புக்கும் மத்தியிலே செல்லமாக வளர்ந்தார்.

தந்தையார் மக்கள் வங்கி முகாமையாளராகச் சாவகச்சேரியிலேயே பணியாற்றியமையினால் இவரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலே ஆரம்பக் கல்வியைக் கற்றார். தந்தையார் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் வந்ததும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலேயே இவர் உயர்தரக் கல்வியைக் கற்றார். விஞ்ஞானத்தை உயர்தரத்திலேயே (BIO) கற்றுச்சித்தியடைந்தார். மாணவப் பருவத்திலேயே இவரது ஆற்றலும் ஆளுமையும் தலைமைத்துவப் பண்பும் தெரியவந்தன என இவரது ஆசிரியர்கள் பாராட்டினர். பலரது பாராட்டையும் பெற்றுச் சிறந்த மாணவனாகத் திகழ்ந்த ராஜ்குமார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் வெளிவாரிப்பட்டப்படிப்புப் பகுதியிலே இணைந்து BIT பட்டப்படிப்பினை மேற்கொண்டார். நாட்டுச்சூழல் காரணமாக கல்வியைத் தொடர முடியாது போனது. பின்னர் யாழ்ப்பாணத்திலே இருந்த தனியார் நிறுவனமான IBMS இல் கணனி விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

பாரதிபதிப்பக உரிமையாளர் திரு. சங்கர் ஐயா அவர்களின் ஆலோசனையுடனும் உதவியுடனும் அச்சுத்துறையிலே கால்பதித்தார். ஆண்டவன் அருளினாலும் தாய்தந்தையரின் ஆசீர்வாதத்தினாலும் கரிகணன் என்னும் நாமத்துடன் **(02.07.2000)** அச்சகம் ஒன்றை நிறுவினார்.

அச்சுக்கலையிலே சிறப்புத்தேர்ச்சியும் பயிற்சியும் உடைய இவர் "செய்வன திருந்தச் செய்" என்பதைத் தனது தாரகமந்திரமாகக் கொண்டிருந்தார். இதனாலே கரிகணன் நிறுவனம் வடபகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமின்றி இலங்கை முழுவதிலும் புலம்பெயர் தேசங்களிலும் புகழ்ந்து பேசப்படும் நிறுவனமாக உயர்ந்து நின்றது. 5 தடவைகள் தொடர்ச்சியாக பாராட்டையும் பரிசையும் பெற்றுக் கொண்ட ஒரே நிறுவனமாக கரிகணன் நிறுவனம் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

அச்சுத்துறை தொடர்பான பயிற்சியையும் பெறும் பொருட்டுச் சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பினார். பலநாட்டு அச்சகங்களினது செயற்பாடுகளையும் நடைமுறைகளையும் நேரிலே பார்த்து வந்த அனுபவத்தினால் தனது நிறுவனத்தை உலகத்தரத்துக்கு ஒப்பாக அமைத்துப் பணியாற்றினார். ஒருகாலத்தில் நாவலர் பதிப்பு என்றால் சுத்தப்பதிப்பு என்று பேசப்பட்டமை போன்று தற்காலத்திலே கரிகணன் பதிப்பு என்றால் சிறந்த பதிப்பு என்று பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அச்சுக்கலை அழகியலை நன்கு பேணிய நிறுவனமாகக் கரிகணன் நிறுவனம் விளங்கியது. பொதுப்பணியிலும் தமது ஈடுபாட்டினைக் கொண்டிருந்த திரு.ராஜ்குமார் பல நிறுவனங்களிலும் பல பதவிகளை வகித்து வந்தார். கொக்குவில் இந்து பழைய மாணவர் சங்கத் தலைவராக, திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத் தலைவராக, யாழ்ப்பாண அச்சகதாரர் இணையத்தின் பிரதித் தலைவராக பல பதவிகளிலே இருந்து சிறப்புடன் பணியாற்றினார்.

திரு.ராஜ்குமார் திரு. செல்வராசா, கோசலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளான யாழினியை 2005.03.20 இல் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு மனஸ்வினி, அனுஷ்வினி, ஷாய்ஸ்வினி என்ற மூன்று புத்திரிகள் உள்ளனர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலே கல்விபயிலும் இவர்களை அன்புடன் அரவணைத்து அறிவார்ந்த பிள்ளைகளாக வளர்த்தார்.

இறைவழிபாடு, தர்மம், பெருந்தன்மை, ஈகைக்குணம், செய்யும் தொழிலே தெய்வம், தம் தொழில் சார் புலைமைத்துவ ஆளுமை எல்லாம் நிரம்பியிருந்த திரு.ராஜ்குமார் சிறந்த குடும்பத்தலைவனாகவும் நல்ல தகப்பனாகவும் போற்றப்பெறும் அயலவராகவும், நண்பராகவும் வாழ்ந்தவர்.

"இறைவனால் நேசிக்கப்படுவோர் இளமையில் இறக்கின்றனர்" என்ற அறிஞரின் கூற்றுக்கிணங்க நல்லூர் முருகன் கொடியேற்ற நாளன்று 02.08.2022 இல் ஊரவர், சுற்றம், உறவுகள் கலங்க இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

- ஓம் சாந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் புலம்பல்......

நான் பிறந்ததிலிருந்து என்னுடன் இருந்த நீங்கள் இன்று இல்லை என்பதை எனது இதயம் ஏற்க மறுக்கிறது அப்பா. சிறுவயதிலிருந்து எனது வாழ்க்கையில் அனைத்து முடிவுகளையும் எடுத்தவர் நீங்கள். என்னை நல்லவழியில் வழிநடத்திச் சென்ற ஆசானும் நீங்கள் தான். எப்பொழுதும் என்னை முதலிடத்தில் வைத்துப் பார்த்தவர் அப்பா நீங்கள். ஒரு மனிதனுக்கு கல்வியை விட சிறந்த ஒழுக்கமே முக்கியம் என்று எங்களை ஒழுக்கமானவராக வளர்த்தவர் நீங்கள். பெண் பிள்ளைகளை வெறுக்கும் இந்தக் காலத்தில் நாங்கள் மூன்று பேரும் பெண் பிள்ளைகளாக இருந்தாலும் எங்களை சலிக்காமல் வளர்த்தவர் நீங்கள். அச்சக சாம்ராஜியத்தின் அரசனாக இருந்தவர் நீங்கள். அச்சகத்துறையே தன் சுவாசமாகக் கொண்டு வாழ்ந்தவர். "கரிகணன்" எனது அப்பாவின் உயிர். தனது உடம்பில் எவ்வளவு பெரிய சத்திர சிகிச்சை நடந்திருந்தாலும் அதையெல்லாம் கணக்கில் கொள்ளாது எத்தனை மணியானாலும் கரிகணனின் வாசலில் அவர் கால் பதியாது நாள் ஓடாது.

அச்சகத்துறையில் ஏற்பட்ட அளவுக்கதிகமான அன்பினால் தனக்கு உடலில் வருத்தங்கள் இருக்கின்றது என்பதை மறந்த ஒருவர் என் தந்தை. எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து எனது அப்பா என்னை கண்டிப்பாகவே வளர்த்து வந்தார். எங்கள் மொழியில் பார்த்தால் அது தான் அன்பு. எனது வாழ்க்கையில் ஒரு பொழுதும் நான் தனியாக முடிவெடுத்ததில்லை. பாடசாலையில் பாடங்கள் தெரிவு செய்யச் சொன்னால் கூட நான் அப்பாவிடம் தான் முடிவு கேட்பேன். அப்பா எனக்கு அதைப்பற்றி நிறைய விளக்கங்கள் தருவார். கல்வியில் மட்டுமல்ல வாழ்க்கைக்குத் தேவையான நிறைய ஆலோசனைகள் தருவார். சிறிய விஷயத்திற்குக் கூட அப்பாவின் உதவியையும் ஆலோசனையையும் தேடுபவள் நான்.

இன்று அந்த ஆசான் என்னை தனியே விட்டுச் சென்று விட்டார். என்னுடைய அப்பா ஒரு விஷயத்தை எனக்கு நெடுகலும் கூறுவார் "மனஸ்வினி உனக்கு முன்னால் நிக்கிறது யார் எவர் என்று பார்க்காதே, அவர் தவறு செய்தால் நெற்றிக்கு நேர் தைரியமாகக் கூறு" என்று கூறி ஒரு வாசகமும் கூறுவார் நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே: மற்ற தந்தையரைப் போல் என் தந்தையார் நீ விஞ்ஞானத் துறையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. எனக்கு எந்தப் பாடத்தில் அதிக விருப்பு இருக்கிறதோ அதையே படி; அவர் அது படிக்கிறார் இது படிக்கிறார் என்று பார்க்காதே என்று கூறுவார் என் தந்தையார். ராஜ் என்றால் அச்சகத்துறை மட்டுமல்ல எங்கள் இல்லமும் தான் அதிரும். எல்லா விடயத்தையும் தன் கைக்குள் வைத்திருப்பார். தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கஷ்டம் வந்தாலும் அதை வெளியில் கூறிக் கொள்ளமாட்டார். அடி மீது அடி வைத்து உயர்த்திய தனது அச்சகம் கரிகணன் அந்தப் பெயர் எப்பொழுதும் வீழ்ந்து விடக்கூடாது என்று இரவுபகல் பாராது உழைத்தவர்.

எங்கள் வீட்டில் அப்பாவுடன் அதிகம் வெளியில் செல்பவள் நான்தான். விழாக்களாக இருக்கட்டும் உறவினர் வீடுகளாக இருக்கட்டும் அவர் தன்னுடன் தனக்கு எப்பொழுது எல்லாம் நேரம் கிடைக்கின்றதோ அப்பொழுது எல்லாம் கூட்டிச் செல்வார். எனக்கு முதல் கரிகணனின் அருமை பெருமை எதுவும் பெரிதாக தெரியாது. வயது அதிகரிக்க அதிகரிக்க வெளிச்சூழலோடு நானும் பழக ஆரம்பிக்கும் பொழுது தான் எனக்கு கரிகணன் வெறும் பெயர் அல்ல அதுதான் அச்சகத்துறைக்கே அடையாளம் என்று அறிந்து கொண்டேன். கொரோனா காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த வேளையில் சில வேளை அப்பாவின் அச்சகத்திற்குச் செல்வேன்.

தொடக்கத்தில் எனக்கு அச்சூழல் பொருந்தவில்லை அப்பாவின் உரத்த குரல் காது நிறைய ஒலிக்கும். சிலவேலைகள் தருவார் அதை திருப்திகரமாக நிறைவேற்றிக் கொடுத்தால் வீடு திரும்பும் வேளையில் நான் கேட்காமலே எனக்குப் பிடித்த பொருட்களை வாங்கித் தருவார். எனது ஒவ்வொரு பிறந்தநாளையும் சிறப்பாக எனது மனம் திருப்தி அடையும் வகையில் செய்வார். பெரும்பாலும் அப்பாவை பகல் நேரங்களில் வீட்டில் காண்பது அரிது. சிலவேளை வேலை குறைவாக இருந்தால் ஞாயிற்றுக்கிழமையில் அப்பாவை வீட்டில் காணலாம். எவ்வளவு வயதானாலும் அப்பாவிற்கு அவரது மகள் இன்னும் குழந்தை தான். சிலவேளைகளில் அப்பா எனக்கு உணவு ஊட்டி விடுவார் அல்லது நான் அப்பாவிற்கு ஊட்டி விடுவேன். எந்த நிமிடம் என்னுடைய அப்பாமீது கோபம் இருந்திருந்தால் வந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

ஒரு பொழுதும் நான் என் தந்தையை விட்டுப் பிரிவேன் என நினைக்கவில்லை. எப்பொழுதும் எனக்கு துணையாகவே இருப்பேன் என்று கூறி இன்று என் வாழ்க்கையின் பாதி அத்தியாயம் முடியும் முன்னமே இறைவனடி சேர்ந்துவிட்டீர்கள். அப்பா உங்களிடம் எப்பொழுதும் பேச்சு வாங்கி பழகிவிட்டது. நீங்கள் பேசினால் தான் நான் நிறைய வேலைகளை நேர்த்தியாக செய்வேன் என்று உங்களுக்கு மிகவும் நன்றாகவே தெரியும். இனிமேல் என்பிழைகளை உங்களைப் போல் யாரால் திருத்த முடியும். சில நேரங்களில் உங்கள் கஷ்டங்களையும் எனக்குக் கூறியிருக்கிறீர்கள். நாம் நிறைய சண்டைகளும் போட்டுள்ளோம். நீங்கள் என்னுடன் மாதக்கணக்கில் கதைக்காமல் இருந்திருக்கின்றீர்கள் இந்த நேரங்களில் என்னால் உங்களின் மௌனத்தை தாங்க முடியாமல் நிறைய நாட்கள் தவித்துள்ளேன். இன்று கதைப்பீர்கள், நாளை கதைப்பீர்கள் என தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கியிருக்கின்றேன்.

பின்னர் எனது தண்டனை காலம் முடிந்தவுடன் நீங்களே எதற்காக நீங்கள் கதைக்காமல் இருந்தீர்கள் என்பதையும் சொல்லுவீர்கள் எது பிழை, எது சரி என்று எனக்கு வழிகாட்டியவர் நீங்கள் அப்பா. என்னை மட்டுமல்லாது எனக்குப் பிறகிருக்கும் இரு தங்கைகளையும் தவிக்க விட்டு சென்று விட்டீர்கள். என்னைப் பொறுத்தவரை நீங்கள் இறக்கவில்லை உங்களுக்குப் பிடித்த அந்த சிவனின் பாதத்தின் கீழே சரணடைந்திருக்கிறீர்கள். எங்கள் இதயங்களில் சிறந்த தகப்பன் எனும் கோயிலில் வீற்றிருக்கிறீர்கள். என்னுடைய வாழ்க்கையிலும் குடும்பத்தவர்களுடைய வாழ்க்கையிலும் நீங்கள் என்றும் ஒரு தெய்வமாக இருப்பீர்கள்.

நீங்கள் அன்பாலும் கண்டிப்பாலும்
வளர்த்தெடுத்த
உங்களை முதன்முதல்
அப்பா என்று அழைத்த
மகள்

**ரா. மனஸ்வினி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“

உள்ளத்தில்
நல்ல உள்ளம்
உறங்காதென்பது
வல்லவன்
வகுத்ததடா
க(ண்ணா)ர்னா
வருவதை
எதிர்கொள்ளடா...

”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுக்கலையின் சாதனைவீரன்

மனிதருள் பலவகையினர்

**நேற்றையதை இன்று செய்வோர்**
**இன்றையதை நாளை செய்வோர்**
**இன்றையதை இன்றே செய்வோர்**
**நாளையதை இன்றே செய்வோர்**

இவ்வகையினருள் "நாளையதை இன்றே செய்து காட்டுவோம்" என்னும் உத்வேகத்தினை அச்சுக்கலையின் முன்னோடியாய் விளங்கும் கரிகணன் நிறுவனத்தின் பணிதனில் நாம் கண்டோம் ஐயா,

கோபமாய்ப் பேசிடினும் அதில் ஓர் எழுச்சி
எம்மனதில் வந்திடும் ஐயா,

உங்களிடமிருந்து நல்லபண்புகளையும், அறிவுரைகளையும்
தொழில்நுட்பங்களையும் நாம் பெற்றுக் கொண்டோம்.

காலன் உங்களைக் கவர்ந்திட்டான் என்பது
கனவு போல் தெரிகிறது........

உங்களுடன் பணிபுரிந்த வேளையில் யாம் பெற்ற அனுபவங்கள் என்றும் உங்களை நினைக்க வைக்கிறது.

**எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.**

சிவனது பாதங்களைச் சென்றடைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக.

துயருடன்
**பணியாளர்கள்**
**(கரிகணன் பிறிண்டேர்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அச்சகத் துறையின் அவதார புருஷர்

## சிவஞானசுந்தரம் ராஜ்குமார் (கண்ணன்)

(உரிமையாளர், கரிகணன் பிறிண்டேர்ஸ்)

தோற்றம்
28.07.1975

மறைவு
02.08.2022

17/9
"கண்ணன் இல்லம்"
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி .

1.அச்சகத் துறையின் அவதார புருஷராகியே
உச்சமென வாழ்ந்தவர் ராஜ்குமார் - இச்சகம்
உள்ளவரை "கரிகணன்" என்ற மகாமந்திரம்
அள்ளக் குறையாமல் ஒலிக்கும்

2. கண்ணன் என்றழைப்பர் கரிகணன் என்றுமழைப்பர்
அண்ணன் வாழ்வு அற்புதமே - மண்ணில்
தொட்ட தெல்லாம் பொன்னாகுமே மரம்
பட்டாலும் துளிர்க்குமாம் இவரால் !

3. ஓம் எனும் மந்திரம் ஒலிக்கும் வீட்டில்
நாம் இறைவனைச் சிக்கெனைப்பிடித்தும் - ஆமாம்
அவனின்றி ஓரணுவும் அசையாது என்பதனைப்
பவமதனால் காட்டினாயோ? இறைவா !

பிரார்த்திக்கும்
ஓம்
சாந்தி

கலாபூஷணம் கே.எஸ்.சிவஞானராஜா
2022.08.11 கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரிகணன் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் திரு சி.ராஜ்குமார் அவர்கள்
பேராசிரியர் மா.வேதனாதனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி எங்கு காண்போம்...?

*02.08.2022* ஆடிச்செவ்வாய் ஆலய பணிகளை நிறைவு செய்து வீடு திரும்பியவுடன் கரிகணன் ராஜ் எமை விட்டுப் பிரிந்து விட்டார் எனும் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன். இந்த செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா இறைவா... ஏன் இந்த சோதனை? ராஜுக்கு என்ன நடந்தது என்று மனதில் பல சிந்தனைகள்.

இப் பூவுலகில் மனிதர்கள் பிறந்து வாழ்ந்து மறைகின்றனர் இவர்களின் செயல்திறன், ஆற்றல், சாதனைகள் போன்றவைகள் இவ்வுலகில் நின்று மிளிர்வதைக் காண்கிறோம். அவ்வகையில் ராஜ் தனது சிந்தனை, செயல்திறன், ஆற்றல், ஆளுமை முழுவதையும் அச்சகத் துறையில் அர்ப்பணித்து நிலைநாட்டியவர். **வடக்கின் அச்சகதாரர்** எனும் மகுட வாக்கியத்துடன் அச்சகத்துறையில் சவால்கள், எதிர்ப்புக்கள், நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் சாதனை படைத்தவர். அவரிடம் தொழிலைக் கற்ற பலர் இன்று தனியாக அச்சகம் நடாத்தி வருகின்றனர்.

காலம் செய்த கோலத்தினாலும் வஞ்சகரின் சதியாலும் உடல், உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலும் நாட்டின் போர்க்கால சூழ்நிலைகள், கொரோனா கால இடர்கள் போன்றவற்றிற்கு மத்தியில் தற்துணிவுடனும் தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டு பெருவெற்றியைக் கண்டவர் எங்கள் ராஜ்.

நோயின் தாக்கம் காரணமாக சக்கர நாற்காலியில் இருந்து சிரித்த முகத்துடன் தனது உறவுகளையும் வாடிக்கையாளர்களையும் அரவணைத்துப் பேசுவார். தனது பணியாளர்களுடன் கண்டிப்பு கோபம் மிகுந்த உரிமையுடன் அன்பாகப் பழகுவார்.

மிகுந்த சமயப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட ராஜ் என்னுடன் சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அன்பும் மதிப்பும் கொண்டு பழகிவந்தார். சிறந்த இலட்சியம் சிந்தனையுடன் சாதிக்கவேண்டும் எனும் உந்துதலுடன் செயற்பட்டவர் ராஜ். சோதனைகள் நிறைந்த வாழ்க்கையில் முட்டியும் மோதியும் தன்னம்பிக்கையுடன் வீறுநடை போட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊழிற் பெருவலியாவுள யாதென்று சூழினும் தான் முந்துறும்" எனும் வாக்கிற்கிணங்க நாம் நினைப்பது எதுவாகினும் இறைவன் சித்தம் எதுவோ அதுவே நடக்கின்றது.

இதனையே யோகர் சுவாமிகளும் "எப்போதோ முடிந்த காரியம்" என்று அருள்வாக்கு கூறினார்.

அவர் வாழ்ந்த காலத்தில் செய்த நற்கருமங்கள், இறைவழிபாடுகள், தானதர்மங்கள் நிச்சயம் அவருக்கு நற்கதியைக் கொடுக்கும். அன்னாரின் குடும்பத்தினருக்கும், நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன்

"வாழ்வது மாயம் மண்ணாவது திண்ணம்
நமக்கும் அதுவழியே நாம் போமளவும்"

என்றும் எப்போதோ கூறிவைக்கப்பட்ட அனுபவமொழிகளை சிந்தித்து தெளிவுற்று ஆடி மாத நாகசதுர்த்தியில் எமை விட்டு நீங்கிய ராஜின் ஆத்மா தலங்காவல் விநாயகரின் தாழில் என்றும் அமர்ந்திருக்கும்.

ஓம் சாந்தி !

**ஸ்ரீவத்ஸ.வ. இராஜேஸ்வரக்குருக்கள்**
**தாவடி, கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை துளிகள்

ஒவ்வொரு தோல்விக்கும்
அடுத்தவரை குறை சொல்லும்
பழக்கம் இருந்தால்.. வெற்றி
என்பது எப்போதும் எட்டாக்
கனியாகவே இருக்கும்.!

திட்டம் இல்லாமல்
தொடங்கப்படும் நாள்
மன நிறைவோடு முடிவதில்லை.

ஒவ்வொரு சவாலையும்
எதிர்கொண்டு வெற்றி பெறும் போது
உங்களின் வலிமையும்
தன்னம்பிக்கையும் அதிகரிக்கின்றது.!

தேவையற்ற விடயங்களை
சிந்தித்துக் கொண்டிருந்தால்
தேவையான விடயங்களை
சிந்திக்க நேரம் இருக்காது.

கடமையை செய்யாமல்
நேரத்தை வீணடிப்பது
உங்களுக்கு நீங்களே
செய்யும் மாபெரும் துரோகம்.

ஒருவர் கோபப்படும் போது
இன்னொருவர் அமைதியாகி விடுங்கள்..
இதை பின்பற்றினால்
ஒற்றுமை அதிகரிக்கும்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு செயலையும் முழு
கவனத்துடன் செய்யுங்கள்..
உங்கள் வாழ்க்கை
ஆனந்தமாக இருக்கும்.

எந்த இக்கட்டான
சூழ்நிலையிலும் நீங்கள் சாதிக்கப்
பிறந்தவர் என்பதை நினைவில்
வையுங்கள்.

உச்ச கட்ட கோபம் வரும் போது
அதன் பாதிப்பை உணர்ந்து
சாந்தம் அடைந்தால் உங்கள்
வாழ்க்கை ஆனந்தமாக
இருக்கும்.

உங்களின் வார்த்தைகள்
உங்கள் மனதில் இருந்து
இன்னொருவர் மனதிற்கு
செல்கிறது.. எனவே
கவனமாக இருங்கள்.

உன்னால் வெற்றி பெற முடியாது
என்று பிறர் சொல்வதை
நம்பாமல்.. உங்கள் மேல்
நம்பிக்கை வைத்தால்
வெற்றி நிச்சயம்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையில் தோல்வி என்றால்........

1. நீங்கள் தோற்றவர் என்று பொருள் அல்ல
நீங்கள் வெற்றி அடையவில்லை என்று பொருள்.

2. நீங்கள் எதையும் சாதிக்கவில்லை என்று அர்த்தமல்ல
சில பாடங்களைப் படித்துள்ளீர்கள் என்றே அர்த்தம்.

3. நீங்கள் அவமானப்பட்டதாக நினைக்க வேண்டாம். முயன்று பார்க்கும் துணிவு உங்களிடம் இருப்பதாகநினைத்துக் கொள்ளுங்கள்

4. வாழ்க்கை வீணாகி விட்டதாகப் பொருள் அல்ல
மீண்டும் ஓர் வாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதே பொருள்.

5. உங்களால் அடைய முடியாது என்று
பொருள் அல்ல, அதனை அடையக் கொஞ்சம்
காலதாமதாகும் என்பதே பொருள்

6. வாழ்க்கையில் எதையும் நாம் இழந்து விட்டோம் என்பது முடிவல்ல, நல்ல எதிர்காலத்தை இறைவன் எமக்கு நிர்ணயித்துள்ளான் என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள் - வெற்றி

1. வெற்றியின் முதல் இரகசியம் - தன்னம்பிக்கை

2. வெற்றியின் பொற்சாவி - எளிமை

3. வெற்றி என்பது ஒரு பயணம். பயணத்தின் முடிவல்ல

4. துணிச்சலின் குழந்தையே வெற்றி

5. தோல்வியைச் சந்திக்கும் துணிச்சல் வெற்றிக்கு உண்டு

6. இன்று நீங்கள அனுபவிக்கும் வெற்றி நேற்று நீங்கள் கொடுத்த விலையின் விளைவு

7. தோல்வி அடையாமல் இருப்பதற்கு நம்பகமான வழி வெற்றி பெறுவோம் என்ற உறுதிப்பாடு

### ஓய்வை வெறுத்தவர் லூயி பாஸ்டர்

சிறிது காலம் ஓய்வெடுக்குமாறு நண்பர்கள் கூற அவர் கூறிய பதில்.
எனது பணிகளை நிறுத்திவிட்டு ஓய்வுபெறுவதென்பது எனக்கு மகிழ்வையோ தென்பையோ தராது. மாறாக அதுதான் எனக்கு பெரிய நரக வேதனையாக இருக்கும். உழைக்கும் போது பெறும் இன்பமும் மகிழ்ச்சியும் ஓய்வுபெறும்போது எனக்கு ஒருநாளும் கிடைக்காது. எனவே இறுதிக்காலத்தில்கூட உழைக்காமல் சோம்பிப்படுத்திருப்பதை சற்றும் விரும்பவில்லை அந்த உத்தமர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# World Tamil University

WORLD TAMIL UNIVERSITY OF UNITED STATES OF AMERICA
WAS LEGALLY INCORPORATED UNDER THE LAWS OF USA

**SL No: WTU 29072022-01**

July 29th, 2022

Mr. S. Rajkumar
Harikanan Printers,
No. 681,
K K S Road,
Jaffna,
Sri Lanka.

Dear Mr. S. Rajkumar,

**SUBJECT: CONFERRING THE TITLE OF DOCTOR OF BUSINESS ADMINISTRATION (HONORIS CAUSA)**

With due respect we would like to bring to your notice that we have perused your accomplishments and contributions from your resume that was submitted to us. Your endeavors are brilliantly laudable.

After carefully reviewing your application, our Academic Advisory Board is pleased to confer the above title, Convocation will be held on the August 20, 2022, at the **Grand Oriental Hotel (GOH), Colombo, Sri Lanka**, from 5.00 pm onwards.

Thank you very much for your interest with **'WORLD TAMIL UNIVERSITY'**, an esteemed educational institution in USA.

We look forward to meeting you during the convocation.

For more information, please visit our website: **https://worldtamiluniversity.us**

With Best Regards,

Chancellor
**WORLD TAMIL UNIVERSITY**

info@worldtamiluniversity.us
www.worldtamiluniversity.us

Level-12 S Church Ave, Tucson,
AZ 85701,United States of America.

உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினால் கிடைக்கப்பெற இருந்த
கலாநிதி (Dr) பட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹ்ன கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூசித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராபரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதை உருக்கும் பாடல்
### (ஜென்மம் நிறைந்தது)

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க!
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க!
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க!
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப்போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே.

கண்களில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடல் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல்தொடு ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதிமழை போன்றதே விதியென்று கண்டும்
மதிகொண்ட மானுடர் மயங்குவதேன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடி வந்து சேரும்

பூமிக்கு யாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும்முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரிய கீற்றொழி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க!
தூயவர் காணொளி சூரியன் சேர்க!
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க!

**கவிஞர் வைரமுத்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கோளறு பதிகம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளியது

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழுபதினெட் டொடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி சயமாது பூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்த அன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்த னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலைவிளை செந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

## (உரையுடன்)

### காப்பு

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்தி-திருவாத்தி பூமாலையை சூடி-அணிபவராகிய சிவபெருமான் அமர்ந்த-விரும்பிய,தேவனை-விநாயகக் கடவுளை ஏத்தி ஏத்தி-வாழ்த்தி வாழ்த்தி தொழுவோம்-வணங்குவோம் யாமே-நாமே.

*1.* அறம் செய விரும்பு
அறம் - ( விதித்தன செய்தல் விலக்கியன ஒழித்தல்- நல்ல செயல்களை செய்வது மற்றும் கெடுதல் செயல்களைச் செய்யாமல் இருப்பது ) செய் - செய்வதற்கு, விரும்பு -நீ ஆசைப்படு.
தருமம் செய்ய நீ விரும்புவாயாக
நல்ல செயல்களைச் செய்வதற்கு மனம் விருப்பம் கொள்ள வேண்டும். மனம் விருப்பம் கொள்ள அந்த நல்ல செயல்களை
மகிழ்வுடன் செய்ய முடியும்.

*2.* ஆறுவது சினம்
ஆறுவது- தவிர்க்க வேண்டியது,
சினம் - கோபம்.
கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.
கோபம் வரும் போது நமது சிந்திக்கும் அறிவு குறைந்து உணர்ச்சிவசப்பட்டு தவறான முடிவு எடுக்கும் சூழ்நிலை உருவாகும். அது எல்லோருக்கும் நல்லது அல்ல.

*3.* இயல்வது கரவேல்
இயல்வது -நம்மால் முடிந்ததை கொடுப்பதற்கு
கரவேல் - வறுமையினாலே இரப்பவர்களுக்கு நீ ஒளியாதே
( "கரவல்" கொடாது மறைக்கை, கரப்பு, மறைப்பு, மறைக்காதே)
உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்கு ஒளிக்காது கொடு.

*4.* ஈவது விலக்கேல்
ஈவது - தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர் கொடுப்பதை
விலக்கேல் - நீ தடுக்காதே
ஒருவர், மற்றவர்க்கு கொடுப்பதை, வேண்டாமென்று தடுக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உடையது விளம்பேல்

உடையது - உனக்கு உள்ள பொருளை
விளம்பேல் - நீ பிறர் அறியும்படி சொல்லாதே
உன்னிடத்திலுள்ள பொருளை அல்லது இரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.
உனக்குள்ள பொருள் மற்றும் சிறப்புகளை பலரும் அறியும்படி பெருமையாக பேசாதே.
உன்னுடைய பலவீனத்தையும் பலரும் அறியும்படி சொல்லாதே. அதனால் நல்ல பயன் எதுவும் இல்லை.

6. ஊக்கமது கைவிடேல்

ஊக்கமது - செய்தொழிலில் மனஞ்சோராமை, உள்ளக் கிளர்ச்சியை
கைவிடேல் - நீ தளர்ந்து போக விடாதே.
எப்போதும் முயற்சியைக் கைவிடக்கூடாது.

7. எண் எழுத்து இகழேல்

எண் - கணித நூலையும்
எழுத்து - அற நூல்களையும், இலக்கண நூலையும்
எண்ணும் எழுத்தும் மக்களுக்கு இன்றியமையாதன் ஆகவே, அவற்றை வீணென்று இகழ்ந்து கற்காமல் விட்டு விடாதே.

8. ஏற்பது இகழ்ச்சி

ஏற்பது - ஒருவரிடத்திலே போய் இரப்பது பிறரிடம் சென்று யாசித்தல்
இகழ்ச்சி - பழிப்பாகும் (அல்லது) இழிவு தரும்.
இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக் கூடாது.

9. ஐயம் இட்டு உண்

ஐயமிட்டு - உன்னிடம் உணவு கேட்பவற்குக் கொடுத்து
உண் - பிறகே நீ உண்ண வேண்டும்.
யாசிப்பவர்கட்கு கொடுத்து பிறகு உண்ண வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*10.* ஒப்புரவு ஒழுகு
ஒப்புரவு - உலக போக்கிற்கு எற்றவாறு
ஒழுகு - நட
உலக நடையை அறிந்துகொண்டு, அத்தோடு பொருந்துமாறு நடந்துகொள்.

*11.* ஓதுவது ஒழியேல்
நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக்கொண்டிரு.

*12.* ஔவியம் பேசேல்
ஒருவரிடமும் பொறாமை கொண்டு பேசாதே.

*13.* அஃகஞ் சுருக்கேல்
அதிக இலாபத்துக்காக, தானியங்களை குறைத்து அளந்து
விற்காதே.

*14.* கண்டொன்று சொல்லேல்.
கண்ணாற் கண்டதற்கு மாறாகப்(பொய் சாட்சி) சொல்லாதே.

*15.* ஙப் போல் வளை.
'ங' என்னும் எழுத்தானது எப்படி தான் பயன்னுள்ளதாக இருந்து தன் வருக்க எழுதுக்களை தழுவுகிறதோ
அது போல நாமும் நம்மைச் சார்ந்தவர்களால் என்ன பயன் என்று பாராமல் அவர்களை காக்க வேண்டும்.
"ங" என்னும் எழுத்தை கூர்ந்து நோக்கினால், ஒருவர் வளைந்து வணக்கம் சொல்வது போல் உள்ளது விளங்கும். அதைப்போல பணிவாக பெரியவர் முன் வளைய வேண்டும் என்று ஔவை உரைத்ததாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

*16.* சனி நீராடு.
சனி(குளிர்ந்த) நீராடு.

*17.* ஞயம்பட உரை.
கேட்பவருக்கு இன்பம் உண்டாகும் படி இனிமையாகப் பேசு.

*18.* இடம்பட வீடு எடேல்.
உன் தேவைக்கு மேல் வீட்டை பெரிதாக கட்டாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*19.* இணக்கம் அறிந்து இணங்கு.
ஒருவரிடம் நட்பு கொள்ளும் முன்,அவர் நல்ல குணங்களும்,நல்ல செய்கைகளும் கொண்டவரா எனத் தெரிந்த பிறகு அவருடன் நட்பு கொள்ளவும்.

*20.* தந்தை தாய்ப் பேண்.
உன் தந்தையையும் தாயையும் அவர்களுடைய முதுமைக் காலம் வரை அன்புடன் காப்பாற்று.

*21.* நன்றி மறவேல்.
ஒருவர் உனக்கு செய்த உதவியை ஒரு போதும் மறவாதே.

*22.* பருவத்தே பயிர் செய்.
எச்செயலையும் அதற்குரிய காலத்திலேயே செய்ய வேண்டும்.

*23.* மண் பறித்து உண்ணேல்.
பிறர் நிலத்தை திருடி அதன் மூலம் வாழாதே (அல்லது)
நீதி மன்றத்தில் இருந்து கொண்டே லஞ்சம் வாங்கிக்கொண்டு
தீர்ப்பு வழங்காதே (என்றும் பொருள் கொள்ளலாம்)

*24.* இயல்பு அலாதன செய்யேல்.
நல்லொழுக்கத்துக்கு மாறான செயல்களைச் செய்யாதே.

*25.* அரவம் ஆட்டேல்.
பாம்புகளை பிடித்து விளையாடாதே.

*26.* இலவம் பஞ்சில் துயில்.
'இலவம் பஞ்சு' எனும் ஒரு வகை பஞ்சினால் செய்யப்பட்ட படுக்கையிலே உறங்கு

*27.* வஞ்சகம் பேசேல்.
கபடச்(உண்மைக்கு புறம்பான,கவர்ச்சிகரமான) சொற்களை பேசாதே

*28.* அழகு அலாதன செய்யேல்.
இழிவான செயல்களை செய்யாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29.** இளமையில் கல்.
இளமை பருவத்தில் இருந்தே கற்கவேண்டியவைகளை (இலக்கணத்தையும், கணிதத்தையும்) தவறாமல் கற்றுக்கொள்.

**30.** அறனை மறவேல்.
கடவுளை (அறன் ஸ்ரீ சிவபெருமானை) மனதில் எப்பொழுதும் நினைக்க-வேண்டும்

**31.** அனந்தல் ஆடேல்.
மிகுதியாக தூங்காதே
ககர வருக்கம் - ஆத்திச்சூடி

**32.** கடிவது மற
யாரையும் கோபத்தில் கடிந்து பேசிவிடாதே.

**33.** காப்பது விரதம்
தான் செய்யத் தொடங்கிய தருமத்தை விடாமல் செய்வதே
விரதமாகும் (அல்லது)
பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமல் அவற்றைக் காப்பாற்றுவதே தவம் ஆகும்.

**34.** கிழமை பட வாழ்
உன் உடலாலும் பொருளாலும் பிறருக்கு நன்மை செய்து வாழ்

**35.** கீழ்மை யகற்று
இழிவான குணஞ் செயல்களை நீக்கு

**36.** குணமது கைவிடேல்
நன்மை தரக்கூடிய நல்ல குணங்களை பின்பற்றுவதை
நிறுத்திவிடாதே(கைவிடேல்).

**37.** கூடிப் பிரியேல்
நல்லவரோடு நட்பு செய்து பின் அவரை பிரியாதே

**38.** கெடுப்ப தொழி
பிறருக்கு கேடு விளைவிக்கும் செயல்களை செய்யாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**39.** கேள்வி முயல்
கற்றவர் சொல்லும் நூற் பொருளை கேட்பதற்கு முயற்சி செய்

**40.** கைவினை கரவேல்
உங்களுக்கு தெரிந்த கைத்தொழிலை மற்றவர்களிடமிருந்து ஒளியாமற் செய்து கொண்டிருக்கவும்.

**41.** கொள்ளை விரும்பேல்
பிறர் பொருளை திருடுவதர்க்கு ஆசைப்படாதே.

**42.** கோதாட் டொழி
குற்றமான விளையாட்டை விட்டு விடு (நீக்கு)

**43.** கௌவை அகற்று
வாழ்வில் செயற்கையாக ஏற்படும் துன்பத்தை நீக்கு

**44.** சக்கர நெறி நில்
தர்மசக்கர நெறிப்படி வாழ வேண்டும். ( அரசன் ஸ்ரீ ஆள்பவர், தலைவர் )

**45.** சான்றோ ரினத்திரு
அறிவொழுக்கங்ளில் நிறைந்த பெரியோர்களுடன் சேர்ந்து இரு.

**46.** சித்திரம் பேசேல்
பொய்யான வார்தைகளை மெய் போலப் பேசாதே

**47.** சீர்மை மறவேல்
புகழுக்குக் காரணமான நல்ல குணங்களை மறந்து விடாதே.

**48.** சுளிக்கச் சொல்லேல்
கேட்பவருக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகும் படி பேசாதீர்

**49.** சூது விரும்பேல்
ஒருபொதும் சூதாட்டத்தை விரும்பாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**50.** செய்வன திருந்தச் செய்
செய்யும் செயல்களை தவறோ குறையோ ஏதும் இல்லாமல் செய்யவும்

**51.** சேரிடமறிந்து சேர்
நீ பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடையவர்களா என நன்கு ஆராய்ந்து பின்பு அவர்களுடன் பழகு.

**52.** சையெனத் திரியேல்
பெரியோர் 'சீ' என வெறுக்கும் படி வீணாய்த் திரியாதே

**53.** சொற்சோர்வு படேல்
பிறருடன் பேசும் பொழுது மறந்தும் குற்றமுண்டாகப் பேசாதே

**54.** சோம்பித் திரியேல்
முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே.

**55.** தக்கோ னெனத்திரி
பெரியோர்கள் உன்னைத் தக்கவன்(யோக்கியன், நல்லவன்) என்று புகழும்படி நடந்துக்கொள்

**56.** தானமது விரும்பு
யாசிப்பவர்களுக்கு தானம் செய்.

**57.** திருமாலுக்கு அடிமை செய்
நாராயணமூர்த்திக்கு தொண்டு செய்

**58.** தீவினை யகற்று
பாவச் செயல்களைச் செய்யாமல் இரு.

**59.** துன்பத்திற் கிடங்கொடேல்
முயற்சி செய்யும் பொழுது வரும் உடம்பின் வருத்தத்திற்கு அஞ்சி அதனை விட்டு விடாதே.

**60.** தூக்கி வினைசெய்
ஒரு வேலையை முடிப்பதற்க்கான் வழிமுறைகளை நன்கு ஆராயிந்து அறிந்து பின்பு அச்செயலை செய்யத தொடங்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. தெய்வ மிகழேல்
கடவுளை பழிக்காதே.

62. தேசத்தோ டொத்துவாழ்
உன் நாட்டில் வசிக்கும் மக்களுடன் பகை இல்லாமல் வாழ்

63. தையல்சொல் கேளேல்
மனைவி சொல் கேட்டு ஆராயாமல் நடவாதே.

64. தொன்மை மறவேல்
பழைமையை மறவாதிருக்க வேண்டும் (பழங்கால மற்றும் பண்டைய முறையிலான நம் தமிழ் கலாச்சாரத்தை விட்டு கொடுக்காமல் இயற்கையோடு ஒத்து வாழ வேண்டும்)

65. தோற்பன தொடரேல்
ஒரு செயலைச் செய்தால் தோல்வியில் தான் முடியும் எனத் தெரிந்தே அதை தொடங்காதே.

66. நன்மை கடைப்பிடி
நல்வினை செய்தலை எவ்வளவு இடையுறு வந்தாலும் உறுதியாகத் தொடரவும்

67. நாடொப் பனசெய்
நாட்டில் உள்ள பலரும் ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை செய்

68. நிலையிற் பிரியேல்
உன்னுடைய நல்ல நிலையில் இருந்து என்றும் தாழ்ந்து விடாதே.

69. நீர்விளை யாடேல்
வெள்ளபெருக்கில் நீந்தி விளையாடாதே

70. நுண்மை நுகரேல்
நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே

71. நூல்பல கல்
அறிவை வளர்க்கும் பல நூல்களைப் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**72.** நெற்பயிர் விளை
நெற்பயிரை விளையச் செய்வதை உன் வாழ்க்கை தொழிலாகக் கொண்டு வாழ்.

**73.** நேர்பட வொழுகு
ஒழுக்கந் தவறாமல் நேர்வழியில் நட

**74.** நைவினை நணுகேல்
பிறர் வருந்தத் தகுந்த தீ வினைகளைச் செய்யாதே

**75.** நொய்ய வுரையேல்
பயன் இல்லாத அற்ப வார்த்தைகளைப் பேசாதே.

**76.** நோய்க்கிடங் கொடேல்
மிகுந்த உணவு உறக்கம் முதலியவற்றால் நோய்க்கு வழிவகை செய்யாதே.

**77.** பழிப்பன பகரேல்
பெரியோர்களால் பழிக்கப்படும் இழிவான சொற்களான பொய்,கடுஞ்சொல் ஆகியவற்றைப் பேசாதே.

**78.** பாம்பொடு பழகேல்
பாம்புபோல கொடிய குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே.

**79.** பிழைபடச் சொல்லேல்
குற்றம் உண்டாகும் படி எதையும் பேசாதே.

**80.** பீடு பெறநில்
பெருமையை அடையும் படியான நல்ல நிலையிலே நில்

**81.** புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
உன்னையே நம்பியவர்களை காப்பாற்றி வாழ்

**82.** பூமி திருத்தியுண்
விளைநிலத்தை உழுது அதில் பயிர்செய்து உண்.(அ)விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**83.** பெரியாரைத் துணைக்கொள்
அறிவிலே சிறந்த பெரியோர்களை உனக்குத் துணையாகப் பேணிக்கொள்

**84.** பேதைமை யகற்று
அறியாமையைப் போக்கு

**85.** பையலோ டிணங்கேல்
அறிவில்லாத சிறுவனோடு கூடித் திரியாதே.

**86.** பொருடனைப் போற்றிவாழ்
பொருள்களை(செல்வம் உட்பட)வீண் செலவு செய்யாமற் பாதுகாத்து வாழ்.

**87.** போர்த்தொழில் புரியேல்
யாருடனும் தேவையில்லாமல் சண்டை பொடுவதை ஒரு வேலையாகச் செய்யாதே

**88.** மனந்தடு மாறேல்
எதனாலும் மனக்கலக்கம் அடையாதே

**89.** மாற்றானுக் கிடங்கொடேல்
பகைவன் உன்னை துன்புறுத்தி உன்னை வெல்வதற்க்கு இடம் கொடுக்காதே.

**90.** மிகைபடச் சொல்லேல்
சாதாரணமான விஷயத்தை மாயாஜால வார்த்தைகளால் பெரிதாகக் கூறாதே.

**91.** மீதூண் விரும்பேல்
மிகுதியாக உண்ணுதலை விரும்பாதே.

**92.** முனைமுகத்து நில்லேல்
எப்போதும் யாருடனாவது சண்டையிடுவதற்காக போர் முனையிலே நிற்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**93.** மூர்க்கரோ டிணங்கேல்
மூர்க்க குணம் கொண்டவர்கள் உடன் பழகாதே

**94.** மெல்லினல்லாள் தோள்சேர்
பிற மாதரை விரும்பாமல் உன் மனைவியுடன் மட்டும் சேர்ந்து வாழ்.

**95.** மேன்மக்கள் சொற்கேள்
நல்லொழுக்கம் உடைய பெரியோர் சொல்லைக் கேட்டு நட.

**96.** மைவிழியார் மனையகல்
விலைமாந்தர் உடன் உறவு கொள்ளாமல் விலகி நில்

**97.** மொழிவ தறமொழி
சொல்லப் படும் பொருளை சந்தேகம் நீங்கும் படி சொல்

**98.** மோகத்தை முனி
நிலையில்லாத பொருள்களின் மேலுள்ள ஆசையை வெறுத்திடு

**99.** வல்லமை பேசேல்
உன்னுடைய சாமர்த்தியத்தை நீயே புகழ்ந்து பேசாதே

**100.** வாதுமுற் கூறேல்
பெரியோர்களிடத்தில் முறன் பட்டு வாதிடாதே

**101.** வித்தை விரும்பு
கல்வியாகிய நற்பொருளை விரும்பு

**102.** வீடு பெறநில்
முக்தியை பெறுவதற்கான சன்மார்கத்திலே வாழ்க்கையை நடத்து

**103.** உத்தமனாய் இரு
உயர்ந்த குணங்கள் கொண்டவனாக வாழ்.

**104.** ஊருடன் கூடிவாழ்
ஊராருடன் நன்மை தீமைகளில் கலந்து வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**105.** வெட்டெனப் பேசேல்
யாருடனும் கத்தி வெட்டுப் போலக் கடினமாக பேசாதே

**106.** வேண்டி வினைசெயேல்
வேண்டுமென்றே தீய செயல்களைச் செய்யாதே

**107.** வைகறை துயிலெழு
நாள்தோறும் சூரியன் உதிக்கும் முன்பே தூக்கத்தில் இருந்து எழுந்திரு

**108.** ஒன்னாரைத் தேறேல்
பகைவர்களை நம்பாதே

**109.** ஓரஞ் சொல்லேல்
எந்த வழக்கிலும் ஒருபுடைச் சார்பாக பேசாமல் நடுநிலையுடன் பேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

*சிவஞானசுந்தரம்
+
அனுஷியாதேவி

சிவகுமார்
+
வத்சலா
→ கிஷோர்
டிஷானி

யசோதா
+
மங்களராஜன்
→ தர்சன்
தர்சிகா + மார்தன்
தனுஜன்

*ராஜ்குமார்
+
யாழினி
→ மனஸ்வினி
அனுஷ்வினி
ஷாய்ஸ்வினி

*அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என்றென்றும் எங்கள்
## நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், பண்பின் உறைவிடமாய்
எல்லோர் மனதிலும் அன்பை விதைத்து எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி சிவபதமடைந்த எங்கள் அன்புத்
தெய்வம்

**அமரர் சிவஞானசுந்தரம் ராஜ்குமார் (கண்ணன்)**

அவர்கள் எம்மைப் பிரிந்த செய்தியினைக் கேள்வியுற்று ஓடோடி வந்து சகல உதவிகளையும், ஒத்தாசைகளையும் செய்த அயலவர்கள், முன்னாள் பணியாளர்கள் (கரிகணன்), நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஈமைக் கிரியைகளிலும் கலந்து கொண்டு நேரடியாக அஞ்சலி செலுத்தியோருக்கும், அன்றைய இறுதி நிகழ்வின் போது கலந்து கொண்டு இரங்கல் உரைகளை நிகழ்த்தியோருக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையங்களை உவந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அன்னார் இறுதியாக நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அவரைப் பரிசோதித்து பராமரித்த வைத்தியர்கள், இந்நாளில் இடம்பெறும் எம் குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், இவ் நினைவுமலரினை ஆக்க உதவிகள், ஒத்தாசைகளும் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

**17/9, "கண்ணன் இல்லம்",**
**பிள்ளையார் வீதி,**
**திருநெல்வேலி தெற்கு,**
**யாழ்ப்பாணம்.**

**-குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்ன நடந்தாலும்
எதை இழந்தாலும்
சோர்ந்து போகமாட்டேன்
காரணம் நான்
**100 வெற்றிகளைக்**
கண்டவனல்ல,
**1000 தோல்விகளைக்**
கண்டவன்.

சிவ.ராஜ்குமார்
செதுக்கிய கரிகணன் அச்சகம்

Print at : Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org